தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆனி 32, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 ஜுலை 16, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு."

ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதன்மூலம் புகழ் உண்டாக வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர, உயிருக்கு உறுதி தருவது வேறெதுவும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

180—

சீரமைத்தல்

***8215—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஜாம்புவானோடை கோரையாற்றின் இடது கரை உடைப்பைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை பராசக்தி அகலாது துணை நிற்க, நீதி தேவதையின் கீர்த்திக் கொடி பறக்க, புதுமைத் திட்டங்கள் புரவிகளாய்ப் பாய்ந்தோட, ஜனநாயகத் தேர் ஏறி, தேர்தல் களத்தில் சுற்றிச் சுழன்று, புயலாக வலம் வந்து, நியாயமென்னும் வில்லெடுத்து, நேர்மையெனும் கணை தொடுத்து, மக்கள் சக்தியின் மகத்தான துணையோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் தீய சக்திகளை மட்டுமின்றி, மாய சக்திகளையும், மாய்மால சக்திகளையும் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்திட்ட வீரத்தாய், நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாதியவாதிகளையும் சந்தர்ப்பவாதிகளையும் தூரப்புறந்தள்ளி, மக்களை மட்டுமே நம்பிப் போட்டியிட்டு, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 39 இடங்களில் 37-ல் வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை காணாத ஒரு புதிய சாதனை படைத்த வெற்றித் தாய், நம் அம்மா அவர்கள்.*

எளிய தொண்டனுக்கு பொதுப் பணித் துறைப் பொறுப்பையும் அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பாதம் பணிந்து, இக்கேள்விக்கு பதிலளிக்க விழைகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) முத்துப்பேட்டை ஒன்றியம், ஜாம்பானோடை கோரையாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது இடதுகரையில் மைல் 99-க்கும் 102-க்கும் இடையில் கரைமீது நீர் வழிந்தோடி 3 உடைப்புகள் ஏற்பட்டன. பின்னர், சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவை சரிசெய்யப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஜாம்பானோடை ஊராட்சி அருகில் கோரையாற்றின் இடதுகரையில் வெள்ளத்தால் ஏற்பட்ட*

உடைப்புகள் சரிசெய்யப்படாமல் உள்ளதால், ஆற்றின் அருகில் உள்ள பேட்டை, ஜாம்பவானோடை போன்ற பகுதிகளிலுள்ள விவசாய விளைநிலங்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே, அவற்றை சரிசெய்திட வேண்டுமென்று கேட்டிருந்தேன். அந்தவகையில், அவற்றை சரிசெய்யப்பட்டதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, காவேரி டெல்டா மாவட்டங்களில், வெள்ளக் காலங்களில், பொதுப் பணித் துறை அதிகாரிகள் சென்று வரக்கூடிய வகையில், ஆறுகளிலுள்ள கரைகளைப் போக்குவரத்து சாலையாக மாற்றுவதற்கான முயற்சியை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கரைகளில் போக்குவரத்து வசதி செய்யப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதியில் முள்ளியாறு, அரிச்சந்திரா நதி மற்றும் வடப்பாறை ஆகிய ஆறுகளிலும், அவற்றின் பிரிவு வாய்க்கால்களிலும் சுமார் 2,716 மீட்டர் தூரத்திற்குக் கரைகளின்மேல் நீர் வழிந்தோடி கரைகள் பாதிக்கப்பட்டன. அக்கரைப் பகுதிகள் யாவும் பின்னர் கூடுதல் மணல் கொண்டு பலப்படுத்திச் சீரமைக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட கோரையாற்றினை நிரந்தரமாகச் சீரமைக்கும் பணிகள் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையின்படி, ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

முற்பகல் 10-05

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் ஒன்றியம், கோரையாற்றின் அருகில் பொன்னுக்குமுண்டான் ஆற்றின் தலைப்பில் ரெங்கநாதபுரம், பைங்காட்டூர், வாட்டார், நல்லூர், அக்கரை கோட்டகம் ஆகிய வருவாய் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவது மிகப் பெரிய சிரமமாக இருக்கிறது. ஆகவே, பொன்னுக்குமுண்டான் ஆற்றின் தலைப்பில் ஒரு கதவணையும், அதேபோல அரிச்சந்திரா நதியில் ஆலிவலம், ஆண்டாங்கரை, புரசங்குடி, ஆதனூர் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தத்திமாங்குடி அருகில் ஒரு தடுப்பணையும் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த இந்தக் கோரிக்கையினையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டத்தின்கீழ் எடுக்கலாமா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வி. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வி. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட சோழவந்தான் வடகரை கண்மாய் கரையில் புறக்கரை தடுப்புச் சுவர் கட்டுவதற்கும், சிறுபாலை சென்னக்கவுண்டன்பட்டி, புதுப்பட்டி பகுதிகளில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான வைகையாற்றின் குறுக்குச் சாலைகளை தார்ச் சாலைகளாக அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2014 ஜூலை 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெல்லாம் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணை. அதன்படி, நம்முடைய சோழவந்தான் தொகுதி சட்ட மன்றப் பேரவையின் உறுப்பினர் மாண்புமிகு திரு. கருப்பையா அவர்களுடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும், ஆற்றின் குறுக்கே இருக்கின்ற நடைபாதை தார்ச் சாலையாக அமைக்கப்படுமா என்றும் அவர் கேட்டிருக்கின்றார். அதுவும் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் இருக்கிற வைகை அணையை நம்பி 5 மாவட்டங்கள் இருக்கின்றன. மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் விவசாயத்திற்காகவும், குடி தண்ணீருக்காகவும் வைகை அணை முக்கியமான பங்கை அளித்து வருகிறது. அதன் கொள்ளளவு 71 அடியாக இருந்து வருகிறது. அதிலே 20 அடிக்கு மேல் மணல் மற்றும் கழிவு சேர்ந்திருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் அதைத் தூர் வார வேண்டி நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர். அந்த அடிப்படையிலே, அதை விரைவில் தூர் வார வேண்டும் என்ற அந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையைத் தூர் வாருவது குறித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய

மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆய்வு முடிந்த பின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பிப்பார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதிக்குட்பட்ட கம்பைநல்லூர், இடையம்பட்டி வழியாக கே.ஆர்.பி.யிலிருந்து வலதுபுறக் கால்வாய்த் திட்டத்தை நீட்டிப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட வாக்குறுதி அளித்திருந்ததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார். அந்தத் திட்டத்தை நீட்டிக்கின்றபட்சத்தில், 27 ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். தமிழகத்திலே, black area என்று சொல்லக்கூடிய பகுதி, மொரப்பூர் பகுதி. மொரப்பூர் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையும் இதுதான். ஆகவே, கே.ஆர்.பி. அணையிலிருந்து வரக்கூடிய கால்வாய்த் திட்டத்தை நீட்டித்து, ஈச்சம்பாடி அணை வரை கொண்டு வருகின்ற திட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டாவது நிதி ஒதுக்கீடு செய்வாரா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.ஆர்.பி. அணையினுடைய கால்வாய் நீட்டிப்புத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே வினா எழுப்பி இருக்கின்றார்கள். அதனுடைய முக்கியத்துவம் கருதி, ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மாவினுடைய மேலான ஆணையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம்*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்கி, புவனகிரி தொகுதி, வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பரங்கிப்பேட்டை ஒன்றியம், கீரப்பாளையம் ஒன்றியம் மற்றும் புவனகிரி ஒன்றியம் ஆகிய இந்த மூன்று ஒன்றியங்களிலும் கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் உப்பு நீராக மாறி, பயன்பாடு இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், 3 ஒன்றியங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தடுப்பணை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி ராமஜெயம் அவர்களின் கோரிக்கையும் கனிவோடு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், கெலவரப்பள்ளி அணையிலிருந்து வேப்பனஹள்ளி தொகுதியில் உள்ள துரையேரி மற்றும் வேம்பள்ளி அணைக்கு நீர் கொண்டுவர வரதாபுரம் ஏரி வரை வெட்டப்பட்டுள்ள கால்வாயை நீட்டித்துத்தர வேண்டி கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே எழுப்பப்பட்ட கேள்விக்கு, கால்வாயை நீட்டித்து துரையேரி மற்றும் வேம்பள்ளி அணைக்கு விரைவில் தண்ணீர் வழங்கப்படும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேற்படி கால்வாய் வெட்டும் திட்டப் பணிக்கான கோப்புகள் தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனவே, மேற்படி திட்டத்தினை இந்த ஆண்டிலாவது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2014 ஜூலை 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கு விடையாக, துறையிலிருந்து அரசுக்கு முன்மொழிவுகள் வரப்பெற்றவுடன், அவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளவியலை, வாழ்வியலை, வறுமையை, வீரத்தை ஓர் ஆராய்ச்சிப் பேராசிரியர் கற்று ஆராய்ந்து கண்டறிந்ததைவிட, பன்மடங்கு அறிந்துள்ளவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பெரியாரின் துணிவும், பேரறிஞர் அண்ணாவின் அறிவும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் கனிவும் கொண்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் நான், மக்களுக்காக நான், மக்களோடு நான் என்ற மாதவத்தோடு வாழும் மாதரசி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாரதியின் பாட்டுக்குப் பொருளாகி, பாவேந்தரின் கருத்துக்கு வடிவாகி, கம்பநாடனின் கவிதைக்குக் கருவாகி, பைந்தமிழரின் வாழ்விற்கு வந்துதித்த காவியமே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிறிதளவும் சிதறாத சிந்தனைகொண்ட சிப்பாய்க் கூட்டத்தினை வழிநடத்தும் வீரத் திருமகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிறிதளவும் சிதறாத சிந்தனைகொண்ட சிப்பாய்க் கூட்டத்தினை வழிநடத்தும் வீரத் திருமகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர்களுள் முதல்வர், முறைசெய்து காக்கும் மன்னவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்போரைத் தேடித் தேடி, களத்தில் உழைப்போரைத் தேடித் தேடி உயர்வளிக்கும் அன்னையே, மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனம் குளிரும் திட்டங்களைத் தந்து, அதிலும் குறிப்பாக வறுமை ஒழிப்புத் திட்டத்தினைத் தந்து,*

2014 ஜூலை 16]

தியாகமே உருவான திருவரங்க ஜோதியே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாயுருவில் உதித்த தமிழர்குல சாமியே மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழகத்தில் இல்லாமை நீக்க, கல்லாமை மாய்க்க, நூறறிவுத் தாயின் பேரறிவால் முல்லைப் பெரியாறு உரிமைதனை வென்றெடுத்த முழுமதியாம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றே ஆண்டுகளில், மு.க. அவர்கள் விதித்த இருளையும் முடக்கி வைத்த முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனக்கென வாழாத தாய்மைத் தவத்தால், தொண்டுக்கே உழைக்கும் தாய்மைத் துணிவால், தொலைநோக்குப் பார்வையால், துடிக்கும் சாத்தால், விண்ணும், மண்ணும் வியக்கும் வீரத் தாயே மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளை வாழ்விக்க இறை தந்த வழித் துணையாம் அம்மா எனும் நூறறிவு களஞ்சியமே மாண்புமிகு அம்மா அவர்கள். தவத்தின் மேன்மைக்கே, தமிழகத்தின் மேன்மைக்கே ஓய்வில்லாத் தாயின் ஓயாத உழைப்பு. தனக்கென ஏதுமின்றி எல்லாமே மக்களுக்கே என்று வாழும் பொன்மனத் தாயே, பொது வாழ்க்கைப் புனிதரே, மாண்புமிகு அம்மாவே, கல்விப் புரட்சி, தொழில் புரட்சி, பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி என எண்ணற்ற திட்டங்களை வழங்கி, ஏங்கித் தவிக்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் தங்கத் தாரகையே, மாண்புமிகு அம்மாவே, நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற. இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற என வாழும் மனித இனம் (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்க, வாழ்க என வாயார வாழ்த்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை. அடிபெறும் அடிபணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசஸ்தலை ஆறு சென்னையிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் வழியிலே, திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியிலே, இடதுபுறமாக, திருவள்ளூர் வழியாக அரண்வாயல் திருமழிசை வழியாகக் கடலைச் சென்று அடைகிறது. அரண்வாயல் பகுதியிலே ஏற்கெனவே இருந்த வெள்ளத் தடுப்பணை உடைந்து பல காலமாக சரி செய்யப்படாமல் இருக்கிறது. அந்தக் கரையின் உடைப்பை

நீக்கி, சீரமைத்து, புதிய தடுப்பணை கட்ட அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் சுப்பிரமணியன் அவர்களுடைய நியாயமான கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்விற்குப் பின் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சௌந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் புழல் ஏரிக்குத் தெற்குப்புறமுள்ள கொளத்தூர் பகுதியையொட்டி இருக்கிற இரண்டு ஏரிகள், அதற்குப் பெயரே ரெட்டை ஏரி, அது மிக அழகான ஏரி, சென்னையின் நுழைவாயிலில் இருக்கிற சிறப்பான ஏரி, அந்த இரண்டு ஏரிகளும் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கின்றன. குப்பைகளைக் கொட்டுகிற இடமாக அது மாறிப்போயிருக்கிறது. நம்முடைய குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்குள்ள நல்ல நீர்நிலையாக அதை மாற்றமுடியும். ஆகவே, அதுகுறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து, அந்த இரண்டு நீர்நிலைகளையும் பாதுகாத்து, அங்கே மக்கள் இன்ப உலா சென்று வருவதற்குள்ள சிறப்பான ஏற்பாடுகளையும் செய்தால், வடசென்னை மக்களின் ஏக்கத்தைப் போக்க முடியும். அதற்கான வாய்ப்பும் அங்கேயிருக்கிறது. ஆகவே, அரசு அதை பரிவோடு கவனித்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. அ. சௌந்தரராசன் அவர்கள் கூறியவாறு, ரெட்டை*

ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகள் சட்டபூர்வமாக அகற்றப்பட்டு, அந்த ரெட்டை ஏரியை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியின் ஜீவாதார அணையான பேச்சிப்பாறை அணை தூர்வாரப்படும் என்று இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் முன்பு சொல்லியிருந்தார். அந்த அணையினால் கன்னியாகுமரியினுடைய நீர்வளம் காக்கப்படுகிறது. அணையிலிருந்து பல டன் எடையுள்ள மணல் எடுக்கமுடியும். ஆகவே, மக்களுடைய தேவையறிந்து, அந்த அணையைத் தூர் வாரித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூர் வாரப்பட வேண்டிய அணைகளின் பட்டியலில் பேச்சிப்பாறை அணையும் இடம்பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்து, அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான உத்தரவினைப் பெற்று, பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

மின்மாற்றி

***32875—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—